


**08. 10. 2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. தொலைத்தொடர்பு துறையில் படைப்பாற்றல் திறன் மற்றும் முன்னேற்றத்தின் தளமாக நம்நாடு உருவெடுத்து வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்

2. இந்திய விமானப்படையின் 93-வது ஆண்டு தினத்தையொட்டி முப்படைத்தலைவர்கள் புதுதில்லியில் உள்ள போர் நினைவுச் சின்னத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

3. தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவ மழையை ஒட்டி அரசு பள்ளிகளுக்கான பாதுகாப்பு வழிகாட்டு நெறிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

4. வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக நீலகிரி, கோவை, ஈரோடு, திருச்சி, உள்ளிட்ட 15 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

5. ஃபின்லாந்தில் நடைபெறும் ஆர்டிக் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் தருண் மன்னேபள்ளி முன்னேறியுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖

<u>பிரதமர்</u>

நாட்டின் தொலைத்தொடர்பு துறையின் வெற்றி சுயசார்பு பாரதத்தின் வலிமையை பிரதிபலிப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப மாநாட்டை இன்று துவக்கிவைத்து உரையாற்றிய பிரதமர், மின்னணு இணைப்புகள் நம்நாட்டு மக்களின் ஒரு அங்கமாகவே மாறிவிட்டதாக எடுத்துரைத்தார்.

இந்தியாவில் உருவாக்கப்பட்ட 4-ஜி தொழில் நுட்பம் அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டதை சுட்டிக்காட்டிய அவர், முதலீடுகள், படைப்பாறல் திறன் இந்தியாவில் தயாரிப்போம் போன்றவற்றிற்கு இது ஏற்ற தருணம் என்றார்.

படைப்பாற்றல் திறன் மற்றும் முன்னேற்றத்தின் வலுவான தளமாக நம்தேசம் உருவெடுத்து வருவதாக பெருமிதம் தெரிவித்த பிரதமர், உலகின் 2-வது பெரிய தொலைத்தொடர்பு சந்தை மற்றும் 2-வது, 5-ஜி அலைக்கற்றை சந்தையாகவும் உயர்ந்துள்ளது என்றார்.

இந்நிகழ்வில் பேசிய மத்திய தொலைத்தொடர்பு துறை அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா, நம்நாட்டின் தொலைத்தொடர்பு புரட்சி, ஜனநாயகம், மக்கள்தொகை, மின்னணு, அதன் விநியோகம் போன்றவற்றை அடித்தளமாக கொண்டுள்ளது என்றார்.

நம்நாட்டின் மின்னணு பொது கட்டமைப்பு மாதிரியை நடைமுறைப்படுத்த 20 நாடுகள் தயாராக இருப்பதாக குறிப்பிட்டார்.

4 நாட்கள் நடைபெறும் இந்நிகழ்வில் கண்ணாடி இழை தொலைத்தொடர்பு, செமிகண்டக்டர் உள்ளிட்ட அடுத்த தலைமுறைக்கான தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖

பிரதமர் - விமான நிலையம்

பிரதமர் திரு. நரேந்திரமோடி நவி மும்பையில் 19 ஆயிரத்து 650 கோடி ரூபாய் மதிப்பிலான முதல்கட்ட சர்வதேச பிரம்மாண்ட பசுமை விமான நிலையத்தை இன்று நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

பிரதமர் மும்பையில் நாளை பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டாமருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖

பூபேந்தர் யாதவ்

நாட்டின் வன உயிரினங்களை பாதுகாத்து அதன் வசிப்பிடங்களை மீட்டெடுத்து சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை பராமரிப்பதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

சுற்றுச்சூழல் வனம் காலநிலை மாற்றம் தொடர்பாக மத்திய வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் வெளியிட்டுள்ள கட்டுரை குறித்து, தமது சமூக வலைதளத்தில் எடுத்துரைத்த பிரதமர், சிறுத்தை, புலி, டால்ஃபின் போன்ற விலங்குகளை பராமரித்து பாதுகாத்து அவற்றின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் மத்திய அரசின் திட்டங்களை சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖

விமானப்படை

இந்திய விமானப்படையின் 93-வது ஆண்டு தினத்தையொட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திரமோடி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

நாட்டின் பாதுகாப்பில் விமானப்படையின் துணிச்சலையும், தன்னிகரற்ற சேவையையும் பாராட்டியுள்ள இவ்விரு தலைவர்களும், பேரிடர் காலங்களில் இந்திய விமானப்படையின் அளப்பரிய சேவையை எடுத்துரைத்தனர்.

புதுதில்லியில் உள்ள போர் நினைவுச் சின்னத்தில் முப்படைத் தளபதி ஜெனரல் அனில் சௌஹான், ராணுவத்தலைவர் ஜெனரல் உபேந்திர திவேதி, கடற்படை தலைவர் அட்மிரல் தினேஷ் கே.திரிபாதி, விமானப்படைத் தலைவர் ஏர்சீஃப் மார்ஷல் அமர் ப்ரீத் சிங் உள்ளிட்டோர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதலின் போது விமானப்படையினரின் துணிச்சல் மிகு செயல்பாட்டை பாராட்டியுள்ள ஏர்-மார்ஷல் அமர் ப்ரீத் சிங், இந்திய விமானப்படையின் அபாரமான செயல்பாட்டால் தேசம் பெருமிதம் கொள்வதாக புகழாரம் சூட்டியுள்ளார்.

காஸியாபாத் ஹிண்டன் விமானப்படை தளத்தில் நடைபெற்ற விழாவில் உரையாற்றிய அவர், 1947-ம் ஆண்டு காஷ்மீரை பாதுகாத்தது,

1971-ம் ஆண்டு பங்களாதேஷ் உருவாக்கம்,

1999-ம் ஆண்டு கார்கில் போர்,

2019-ம் ஆண்டு பாலக்கோடு துல்லிய தாக்குதலில் விமானப்படையினரின் வீர தீர செயல்பாட்டை சுட்டிக்காட்டினார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் தேசத்தின் வான் பகுதிகளை பாதுகாக்கும் விமானப்படையின் துணிச்சலுக்கு தலைவணங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖

பள்ளி கல்வித்துறை

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழையை ஒட்டி அரசு பள்ளிகளுக்கான பாதுகாப்பு வழிகாட்டு நெறிமுறைகளை பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள்ளது.

இதன்படி பள்ளி வளாகத்தில் மின் கசிவு ஏற்படா வண்ணம் மின்சாதனங்கள் பராமரிக்கப்பட வேண்டும்,

மாணாக்கர் மின் சாதனங்களை தொடாதவாறு கண்காணிப்பு தீவிரப்படுத்த வேண்டும்,

மின் மோட்டார்கள் பாதுகாப்பாக இருப்பது உறுதிசெய்யப்பட வேண்டும்,

பள்ளி கட்டட மேற்கூரைகளில் மழைநீர் தேங்காமல் இருக்க வேண்டும் என்று பள்ளிக்கல்வித் துறை அறிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

கோவை அவினாசி மேம்பாலத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், பொதுமக்களின் பயன்பாட்டிற்கு நாளை திறந்து வைக்கிறார்.

ஆயிரத்து 791 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 கிலோ மீட்டர் தொலைவிற்கு மிகப்பெரிய பாலமாக இப்பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

நெல்கொள்முதல்

மேட்டூர் அணை இந்தாண்டு சரியான நேரத்தில் திறக்கப்பட்டதால் கடந்த ஆண்டை காட்டிலும் நெல் உற்பத்தி பல மடங்கு அதிகரித்துள்ளதாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக இயக்குனர் திரு.அண்ணாதுரை தெரிவித்திருக்கிறார்.

திருவாரூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் தேக்கம் இருக்க கூடாது என்பதற்காக புதிய நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுவதாக தெரிவித்தார்.

விவசாயிகளை காக்க வைக்காமல் நாள் ஒன்றுக்கு ஆயிரம் மூட்டைகள் நெல் கொள்முதல் செய்யப்படுவதாகவும் அவர் கூறினார்.

❖❖❖❖❖❖❖

சேலம்

சேலம் மாவட்டத்தில் மலைவாழ் விவசாயிகளின் வாழ்க்கையை மாற்றியமைக்கும் வகையில் சிறு குறு தானிய உற்பத்தி திட்டம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

நாகமலை

ஈரோடு மாவட்டம் நாகமலை குன்றை மாநிலத்தின் 4-வது உயிரியல் பாரம்பரிய தளமாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

நாகமலை குன்று சூழலியல் வளம்மிக்க இடமாகவும், இடம்பெயர்ந்து வரும் பறவைகள், நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் பல்வேறு ஈர நில சுற்றுக்சூழல் அமைப்புகளுக்கு முக்கிய வாழ்விடமாகவும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖

## வனவிலங்கு வாரம்

வனவிலங்கு வாரத்தை ஒட்டி கோவை மாவட்டம் ஆனைக்கட்டியில் உள்ள பறவையியல் வரலாற்று மையம் சார்பில் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

யானை - மனித மோதலை தடுப்பதற்கான நடைமுறைகளை எடுத்துரைக்கும் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

❖❖❖❖❖❖❖

## தஞ்சை வாய்ஸ்

வடகிழக்கு பருவமழையை ஒட்டி தஞ்சை மாவட்டத்தில் பொதுமக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆட்சித் தலைவர் திருமதி. பிரியங்கா பங்கஜம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

## இருவரி

கரூர் கூட்டநெரிசல் சம்பவத்தில் காயமடைந்த 45 பேரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபாய் முதல் ஒருலடசம் ரூபாய் வரையிலான காசோலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தங்கவேல் இன்று வழங்கினார்.

மயிலாடுதுறையில் நிர்வாக காரணங்களுக்காக ஒத்திவைக்கப்பட்ட கிராமசபை கூட்டங்கள் வரும் சனிக்கிழமை நடைபெறுகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் பிரதமரின் கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ் பயன்பெற விரும்பும் மாணாக்கர் வரும் 15-ம் தேதிக்குள் இணைய தளத்தில் பதிவுசெய்ய ஆட்சித் தலைவர் திரு. ஷேக் அப்துல் ரஹ்மான் கேட்டுக் கொண்டார்.

திருவாரூர் மாவட்டத்தில் கட்டாய கல்வி உரிமை சட்டத்தின் கீழ் தனியார் பள்ளிகளில் 25 சதவிகித இடஒதுக்கீட்டில் மாணவர் சேர்க்கைக்கு நாளைக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திரு. மோகனச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம் ஆலம்பட்டி அரசு நடுநிலைப்பள்ளியில் மாணாக்கரின் கற்றல் செயல்பாடுகள் மற்றும் அடிப்படை எண்ணறிவு திறன்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பிரவீன்குமார் இன்று ஆய்வு செய்தார்.

நாகை மாவட்டத்தில் ஆவின் விற்பனை நிலையம் அமைக்க விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

## வானிலை

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக நீலகிரி, கோவை, ஈரோடு, திருச்சி, தர்மபுரி, திருப்பத்தூர் திண்டுக்கல், கரூர். திருப்பூர் வேலூர் ராணிப்பேட்டை உள்ளிட்ட மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இதன் இயக்குநர் திரு. செந்தாமரை கண்ணன் தெரிவிக்கையில்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

ஃபின்லாந்தில் நடைபெறும் ஆர்டிக் ஓப்பன் பேட்மிட்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் தருண் மன்னேபள்ளி முன்னேறியுள்ளார்.

முதல் சுற்றில் பிரான்ஸ் நாட்டின் **Toma** வை 11-21 21-11, 22-20 என்ற செட் கணக்கில் வென்றார்.

லக்ஷயா சென் - ஜப்பானின் **Kodai Naraoka -**வை இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖